# <u>பிரபல கார்டூனிஸ்ட் திரு R.K.லக்ஷ்மண் காலமானார்</u>






இந்திய நாட்டின் மிகச்சிறந்த கார்டூனிஸ்டும், பிரபல எழுத்தாளர் திரு R.K.நாராயணன் அவர்களின் சகோதரருமான திரு R.K.லக்ஷ்மண் தனது 94ஆவது வயதில் 26.01.2015 அன்று பூனா மருத்துவமனையில் காலமானார். தனது சகோதரரின் படைப்புகளுக்கு சித்திரம் வரைய துவங்கிய அவர் பின்னாட்களில் இந்தியாவின் மிகச் சிறந்த கார்ட்டூனிஸ்டாக திகழ்ந்தார். அவர் வரைந்த கார்ட்டூன்களில் சித்தரிக்கப்பட்ட ”சாதாரண மனிதன்” (COMMON MAN) மிகவும் பிரபலமானவர். அவரது மறைவு பத்திரிக்கை துறைக்கு ஒரு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. அவரது மறைவிற்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.